සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

**දෙවන වාර පරීක්ෂණය 2018** **11 ශ්‍රේණිය**
**இரண்டாம் தவணைப் பரீட்சை 2018** **தரம் 11**
**Second Term Test 2018** **Grade 11**

**දෙමළ භාෂාව හා සාහිත්‍යය III** **පැය දෙකයි**
**தமிழ் மொழியும் இலக்கியமும் III** **இரண்டு மணித்தியாலம்**
**Tamil Language & Literature III** ***Two hours***

- *அறிவுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.*
- *1 , 2 , 3 , 4 ஆகிய வினாக்களுக்கும் 5 , 6 , 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.*
- *இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்*

1. சுருக்கமான விடை தருக.

(I) ‘‘பிறிற்றோ தக்கவர் அல்லா’’
(அ) பிறிற்றோ என்பவர் யார் ?
(ஆ) இக்கூற்று இடம் பெற்ற பாடப்பகுதி எது?

(II) கழியும் பிழை பொருட் டள்ளி நன்னூலாங் கடலினுண்டு
(அ) இப்பாடலைப் பாடியவர் யார்?
(ஆ) இவரது இயற் பெயர் என்ன?

(III) ‘வழங்கு கொடை மகராசர் குறும்பலவி னீசர்’
(அ) இப்பாடலில் குறும்பலவினீசர் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
(ஆ) இங்கு அவரின் எச்சிறப்பு குறிப்பிடப்படுகிறது.

(IV) ‘உன்னை அடையாட்டி காட்டுப்பள்ளி’
(அ) இங்கு காட்டுப்பள்ளி எனக் குறிப்பிடப்படுவது என்ன?
(ஆ) இப்பாடலில் வரி காதலனின் எத்தகைய மன உணர்வினை எடுத்துக் காட்டுகிறது

(V) ஏதிலார் ஆரத் தமர் பசிப்பர் பேதை
பெரும் செல்வம் உற்றக் கடை
(அ) இதில் ஏதிலார் எனக் குறிப்பிடப்படுவது யாரை?.
(ஆ) தமர் எனக் குறிப்பிடப்படுவர் யார்?

(VI) ‘குளித்து மணற் கொண்ட கல்லாவிளமை’
(அ) இப்பாடல்வரி இடம்பெற்ற பாடலைப் பாடியவர் யார்?
(ஆ) கல்லாவிளமை எனப்படுவது யாது?

(VII) பாண்டிமாதேவி கண்ணகி தேவி ஆகிய இவ்விருவரினும் மிகச் சிறந்தவர் யார்?
(அ) இவ்விரு பாத்திரங்களும் இடம் பெறும் காப்பியம் எது?
(ஆ) அதனை எழுதியவர் யார்?

(VIII) ‘என் வெள்ளைக் கொக்கு தூங்கிக் கொண்டிருந்தது’
(அ) இங்கு வெள்ளைக் கொக்கு என விளிக்கப்படுலர் யார்?
(ஆ) இவ்வரி இடம் பெற்ற சிறுகதையை எழுதியவர் யார்?

(IX) ''ஊனையும் உடலையும் ஊட்டி இம்மண்ணை உயிர்த்தவர்க்கு இங்கு அன்பு பூணுவாரில்லை''
(அ) இப்பாடல் வரிகள் இடம் பெற்ற பாடலை தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?
(ஆ) பூணுவார் என்பதன் பொருள் யாது?

(X) ''தச்சன் செய்த சிறுமா வையம்''
(அ) இச்செய்யுள் யாருடைய கூற்றாக அமைந்துள்ளது?
(ஆ) சிறுமா வையம் என்றால் என்ன?

2. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரை நடைப்பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(I)

நீரெ டுத்து வருவதற் கவள் மணி
நித்தி லப்புன்னகை சுடர் வீசிடப்
போரெ டுத்து வருமதன் முன் செலப்
போகும் வேளை யதற்குத் தினந் தொறும்
வேரெடுத்துச் சுதந்திர நற்பயின்
வீந்திடச் செய்தல் வேண்டிய மன்னர் தம்
சீரெடுத்த புலையியற் சாரர்கள்
தேச பக்தர் வரவினைக் காத்தல் போல

(அ) இப்பாடலில் பெண்ணின் வருகைக்காக பாரதியார் காத்திருந்த விதம் எவ்வாறு குறிப்பிடப்படுகிறது?
(ஆ) பெண்ணின் புன்னகை எத்தகையது என குறிப்பிடப்படுகிறது?

(II)

சுடு மயானத் திடை தன் றுணை யேகத்
தோன்றறுயர்க் கடலி னேகக்
கடுமையார் கானகத்துக் கருணையா
கலி யேகக் கழற்கான் மாய
எனடுமையானளனறளந்த வுலகெல்லாந்
தன் மனத்தே நினைத்து செய்யுறங்
கொடுமைய லளந்தாளை யாரிவரென
றுரை யென்னக் குரிசில் கூறும்

(அ) இங்கே கைகேயின் கொடுமையான செயல்களாக குறிப்பிடப்படும் மூன்று விடயங்கள் எவை?
(ஆ) கழற்கான் மாயன் எனக் குறிப்பிடப்படுவர் யார்?

(III) தென்றலிலே அசைந்தாகும் செற்நெல்வயற் கதிர்கள்
தேனருவி என வழியும் ஏருழவன் வியர்வை
குன்றெனவே நிமிர்தோங்கிக் குதூகலிக்கும் தோள்கள்
குணக்குன்றாய் உழைத்துண்ணும் குலவிளக்காம் மனிதன்
முன்றலிலே மண்ணளைந்து முழங்காலில் தவழ்ந்து.
முத்துதிர நகை செய்யும் சொத்தாகும் மழலை
கன்றினது உடல் நக்கிக் கனைக்கின்ற பசுக்கள்
கரைந்தளத்து இரையுண்ணும் காக்கைகளின் கூட்டம்

(அ) இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள உருவக அணி ஒன்றினையும் உவகை அணி ஒன்றினையும் குறிப்பிட்டு விளக்குக.
(ஆ) குழந்தையின் செயல் இதில் எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளது?

(IV) இந்த சினிமா மொழியை , அதன் தன்மையை , தளித்துவத்தை உணர்ந்து ஒரு படைப்பாளி அதை அழுத்தமாகக் கையாளும் போது , அங்கே நல்ல சினிமா பிறக்கிறது. இந்த மொழியிலிருந்து மாறுபட்டு , வாய்ப்பேச்சினால் கதை சொல்ல முற்பட்டால் அங்கே சினிமா நலிவடைகிறது பேசும் மொழியைப் போலவே இந்த மொழியின் நயம் அதைப் பயன்படுத்தும் படைப்பாளியின் திறனை கற்பனை வளத்தைப் பொறுத்தது.

(அ) நல்ல சினிமா எவ்வாறு பிறக்கிறது ?
(ஆ) சினிமா மொழி எவ்வாறாது என இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது?

3. குற்றாலக் குறவஞ்சியில்
(அ) மலை வளம் கூறுதலும்
(ஆ) நாட்டு வளம் கூறுதலும்
சிறப்பிக்கப்படுமாற்றினை விளக்குக.

அல்லது

குகப்படலத்தில்
(அ) பரதன் தாய்மார் மூவரையும் அறிமுகப்படுத்தல்
(ஆ) கோசலை கூறிய வாழ்த்துரை
ஏன்பன விவரிக்கப்படுமாற்றினை விளக்குக.

4. நாவலர் எழுந்தார் கட்டுரையில்
(அ) பிறிற்றோவின் நேர்மையற்ற செயலும்
(ஆ) நாவலர் எழுச்சியும்
ஏன்பன புலப்படுத்தப்படுமாற்றினை விளக்குக.

அல்லது

சீறி ஓடாத வருங்கால மனித நதி
(அ) எழுத்தறிவின்மையின் அவலம்
(ஆ) எழுத்தறிவற்ற அவனுக்காக கவலைப்படும் கவிஞரின் மனம்
விளக்கப்படுமாற்றினை விபரிக்குக.

- 5 , 6 , 7 ஆகிய வினாக்களுக்கு ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.

5. மூத்தம்மா சிறுகதையில்
(அ) கிராமத்தில் காணப்படும் மூட நம்பிக்கைகளை
(ஆ) கிராமத்தில் காணப்படும் வாழ்வியல் அம்சங்கள்
வெளிப்படுத்தமாற்றினை விபரிக்குக.

6. கம்பியூட்டர் சிறுகதையில்
(அ) கையாளப்பட்டுள்ள உவமைகள்.
(ஆ) அன்றாட வாழ்வில் கம்பியூட்டரின் தாக்கம்
ஏன்பவை குறிப்பிடப்பட்டிருக்கு மாற்றினை விளக்குக.

7. நாட்டார் பாடல்களில்
(அ) அரிவி வெட்டும் பாடல்
(ஆ) காதல் பாடல்
ஏன்பவை கிராமிய மண் வாசனையினை வெளிப்படுத்துமா்றினை விபரிக்குக.